செ.வெ. எண்: 33 நாள்: 12/01/2011

# தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## செய்தி வெளியீடு

அறுவடை திருநாளை தமிழர்கள் பொங்கல் திருநாளாக தொன்றுதொட்டு கொண்டாடி வருகின்றனர். பொங்கலின் முதல் நாளை போகி பண்டிகையாக அனுசரித்து பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கேற்பக் கொண்டாடி வருவது வழக்கம். இந்நாளில் தமிழர்கள் திருமகளை வரவேற்கும் முகமாக தங்கள் வீட்டில் உள்ள பழைய வேண்டாத பொருட்களை அப்புறப்படுத்தி அவற்றை எரிப்பதும் வீடுகளை சுத்தம் செய்து மா கோலமிட்டு கொண்டாடுவதும் வழக்கம். இத்தகைய நடைமுறை நகர்ப்புறங்களில் வேறுவிதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு போகியன்று செயற்கை பொருட்களான டயர்கள், பிளாஸ்டிக் மற்றும் பிற இதர தேவையற்றவைகளையும் எரிக்கும் பழக்கத்தைக் கையாண்டு வருகின்றனர். இத்தகைய செயற்கை பொருட்களை எரிப்பதால் ஏற்படும் நச்சு வாயுக்களான, கார்பன் மோனாக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடுகள், கந்தக–டை–ஆக்ஸைடு, டையாக்சின், ப்யூரான் மற்றும் நச்சுத் துகள்கள் ஆகியவற்றின் தீமைகளை உணராமல் எரித்து வருகின்றனர். இவ்வாறு எரிப்பதால் சுற்றுப்புற காற்றின் தன்மை மாசுபடுகிறது. இதன் மூலம் கண், மூக்கு, தொண்டை, தோல் ஆகியவற்றில் எரிச்சல் ஏற்படுகிறது. மேலும் சுவாச சம்பந்தமான நோய்களான ஆஸ்துமா, மூச்சுத் திணறல் போன்ற உடல் நலக்கேடுகள் ஏற்படுகின்றன. இவை தவிர, எரிப்பதால் ஏற்படும் புகையினால் பார்க்கும் திறன் குறைபடுகிறது. பொதுவாக மார்கழி மாதத்தில் அதிகாலையிலும் இரவிலும் வெப்பநிலை குறைந்து பனி மூட்டமாகக் காணப்படும். அத்துடன் நச்சுப்புகைகளும், நுண்துகள்களும் வெளியேற்றப்பட்டு அடர்த்தியான புகை மூட்டம் ஏற்படுகிறது. இதனால் பார்க்கும் திறன் குறைந்து சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டு, விபத்து ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. மேலும் இத்தகைய புகையினால் குறுகிய நீண்டகால பாதிப்புகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. இதுபோன்ற காற்றை மாசுபடுத்தும் செயல் சட்டப்படி குற்றமாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986, பிரிவு (15)–ன்படி இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இவற்றைக் கட்டுப்படுத்த தமிழக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது. போகியை முன்னிட்டு இந்த ஆண்டு விரிவாக விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இத்தகைய விழிப்புணர்வு பிரச்சாரம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் இயக்குனரகம், சென்னை மாநாகராட்சி, சென்னை மாநகர காவல் துறை,

தீயணைப்பு துறை மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியன ஒருங்கிணைந்து சென்னை நகரின் 10 மண்டலங்களிலும் 12.1.2011 மற்றும் 13.1.2011 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட உள்ளது. கடந்த ஆண்டில் போகிப் பண்டிகை அன்று பிளாஸ்டிக் ரப்பர், டயர் போன்ற பொருட்களை எரிக்கக் கூடாது என்ற மன மாற்றம் பொதுமக்களிடையே ஏற்பட்டு இருந்ததாலும் இத்தகைய விழிப்புணர்வு பிரச்சாரங்கள் அவசியமாகின்றன. ஏனெனில் அனைவரும் சுற்றுச் சூழல் சீர்கேட்டினை ஏற்படுத்தும் செயல்களைத் தடுக்கவும் தங்கள் உடல்நலத்தை பாதுகாக்கவும் இச்செயல் அவசியமாகிறது.

மேற்கண்ட விழிப்புணர்வு பிரச்சாரத்தில் டயர்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர தேவையற்ற பொருட்களை எரிப்பதால் ஏற்படும் கேடுகளை குறித்து துண்டு பிரசுரம் மூலமாகவும், குறு நாடகம் மூலமாகவும், கை ஒலி பெருக்கி மூலமாகவும் பிரச்சாரம் செய்யப்பட உள்ளது. சென்னை நகரில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் காலை கூட்டங்களில் மாணவர்களிடம் டயர்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர தேவையற்ற பொருட்களை எரிப்பதில்லை என உறுதிமொழி ஏற்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 13.1.2011 இரவு 10 மணி முதல் 14.1.2011 காலை 7.00 மணி வரை போகியன்று எரிப்பதை கண்காணிக்க 20 குழுக்களை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் இயக்குனரகம், சென்னை மாநகராட்சி, சென்னை நகர காவல் துறை, தீயணைப்பு துறை ஆகியவைகளுடன் இணைந்து செயல்பட உள்ளது.

மேலும் காற்று மாசின் அளவிணை கண்டறிய (24 மணி நேரம்) சென்னை நகரில் 9 இடங்களில் (அண்ணா நகர், கீழ்பாக்கம், தியாகராய நகர், வள்ளலார் நகர், வியாசர்பாடி, இராயபுரம், பெசன்ட் நகர், திருவல்லிக்கேணி மற்றும் மந்தைவெளி) போகிபண்டிகைக்கு முன்தினமும் போகி அன்றும் காற்று மாசினை அளவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய விழிப்புணர்வு பிரச்சாரங்களைத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

போகி பொங்கல் திருநாட்களை சுற்றுச்சூழல் மாசுபடாமல் கொண்டாட அன்புடன் வேண்டுகிறோம்.

12/1/2011

தலைவருக்காக

2/2

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9